# தமிழர்கள் இந்துக்களா?

பெரியார்

வெளியீடு:

பெரியார் திராவிடர் கழகம்
29, இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்
சென்னை – 600 041
periyarmulakkam@yahoo.com

நூலின் பெயர் : தமிழர்கள் இந்துக்களா?
ஆசிரியர் : பெரியார்

வெளியீடு : பெரியார் திராவிடர் கழகம்
29, இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்
சென்னை - 600 041
பதிப்பு ஆண்டு : 2007 மே

தாளின் தன்மை : என்.எஸ். 60 ஜி.எஸ்.எம்

அச்சு எழுத்து அளவு: 11 புள்ளிகள்

நூலின் அளவு : டெம்மி 1/8

கணினியாக்கம் &
அட்டை வடிவமைப்பு: அசுரன் ஊடகம், திண்டுக்கல்
அச்சாக்கம் கிரியேட்டிவ் கிராபிக்ஸ், சென்னை

நூல் கிடைக்குமிடங்கள்: பெரியார் படிப்பகம்
பெரியார் பேருந்துநிலையம் அருகில்
மேட்டூர் - 636 401

பெரியார் படிப்பகம்
திருவள்ளுவர் பேருந்துநிலையம் அருகில்
காந்திபுரம் - கோவை - 641 044

நன்கொடை : உரு. 5

# இந்து மதமும் தமிழர்களும்

## இந்து மதம்

திராவிடர்கள் இந்துக்கள் அல்ல என்பது எமது கருத்தாகும், இந்தக் கருத்தை ஆதாரமாக வைத்தே திருவாரூரில் கூடிய ஜஸ்டிஸ்கட்சி மாகாண மகாநாட்டில் "திராவிடர் ஆகிய நாம் இந்துக்கள் அல்ல" என்றும், மக்கள் எண்ணிக்கையைக் கணக்கு எடுக்கும் சென்சஸ் ரிபோர்ட்டில் நாம் ஒவ்வொருவரும் திராவிடர் என்று பெயர் கொடுக்க வேண்டுமே ஒழிய இந்துக்கள் என்று பெயர் கொடுக்கக் கூடாது என்றும் தீர்மானம் செய்திருக்கிறோம்.

ஆனால் இத்தீர்மானத்தை அனேக ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை. அரசியல் பதவிகளில் இருக்கிற லட்சியத்தில் பதினாறில் ஒரு பாகத்தைக் கூட நம்மவர்களில் அனேகர் சமுதாயத்தில் தங்களுக்கு இருக்க வேண்டிய பதவிகளைப் பற்றியோ தங்களது இழிநிலையைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. இந்தக் காரணமே திராவிடர்களின் இழிநிலைக்கு முதன்மையானதாக இருந்து வருகிறது. எவ்வளவோ பெரும் படிப்பும், ஆராய்ச்சி அறிவும், மேல்நாட்டு நாகரிகமும் தாராளமாய்க் கொண்ட மக்கள் கூடத் தாங்கள் அனுபவித்து வரும் சமுதாய இழிவு விஷயத்தில் போதிய கவலைப்படாமலே இருந்து வருகிறார்கள். இவர்கள் சிறிது கவலை எடுத்துக் கொண்டிருந்தாலும் மாபெரும் மாறுதல் ஏற்பட்டிருக்கும் என்பதோடு திராவிட நாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டில் இருந்து "இந்து மதம்" பறந்து ஓடி இருக்கும்.

இந்து மதம் என்று இல்லவே இல்லை என்பது, கடுகளவு அறிவு உள்ளவர்களும் உணரக்கூடிய காரியமேயாகும். இந்து மதம் என்பது திராவிடர்களை இழிவுப்படுத்தி, கீழ்மைப்படுத்தி அவர்கள் முன்னேறுவதற்கு இல்லாமல் ஒடுக்கி வைத்திருக்கிறதற்கே ஏற்படுத்தப்பட்டது என்பதல்லாமல் அதற்காகவே இந்துமதம் என்பதாக ஒரு போலிவார்த்தை எச்சரிக்கப்படுகிறது என்பதல்லாமல், மற்றபடி வேறு கொள்கையுடனோ குறிப்புகளுடனோ இந்து மதம் இருக்கவில்லை. உண்மையில் இந்து மதம் என்பதாக ஒன்று இல்லை என்பதற்கு ஆரியர்கள் சொல்லும் சொற்களே போதிய சான்றாகும்.

1940-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ஆம் தேதியில் சென்னைத் திருவல்லிக்கேணி மணி அய்யர் மண்டபத்தில் நடந்த "தமிழ்நாடு



ஆரியர் மகாநாடு" என்பதில் தலைமை வகித்த திவான் பகதூர் வி.பாஷியம் அய்யங்கார் அவர்கள் தமது தலைமைப் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

"நாம் அனைவரும் ஆரிய மதத்தைச் சேர்ந்தவர்களாவோம், இந்து மதம் என்பதாக ஒரு மதம் கிடையாது. இந்து என்கிற பெயர் நமக்கு அந்நியர் கொடுத்ததேயாகும். நாம் ஆரியர்கள்; ஆரியப் பழக்க வழக்கத்தை அனுசரிக்கிறவர்கள் ஆரியர்களேயாவார்கள்".

"கண்டவர்களையெல்லாம் ஆரியமதத்தில் சேர்த்துக் கொண்டதானது ஆரிய மதத்தின் பலவீனமேயாகும்". என்பதாகப் பேசி இருக்கிறார். இந்தப் பேச்சு 10-12-40இல் இந்து, மெயில், சுதேசமித்திரன், தினமணி, விடுதலை ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்து இருப்பதோடு விடுதலையில் இதைப்பற்றி அதே தேதியில் தலையங்கமும் எழுதப்பட்டிருக்கிறது.

மற்றும் திவான் பகதூர் பாஷியம் அய்யங்கார் அவர்கள் அதே பேச்சில் "இந்து மதத்திற்கு ஆதாரம் வேதங்களேயாகும்" "வேதத்தை ஒப்புக்கொள்ளாதவர் இந்துவல்ல" என்றும் பேசி இருக்கிறார். எனவே இந்து மதம் என்பதோ அல்லது ஆரியமதம் என்பதோ ஆரியர்களுடைய ஆரியர்களின் நன்மைக்கேற்ற கொள்கைகளைக் கொண்ட மதம் என்பதும், அது வேதமதம் என்பதும் இப்போதாவது திராவிடர்களுக்கு விளங்குகிறதா என்று கேட்கிறேன்.

அதோடு கூடவே சைவர்களையும், சைவப் பண்டிதர்களையும், தங்களைத் திராவிடர் (தமிழர்) என்று சொல்லிக் கொள்ளுபவர் களையும், "திராவிடர்கள் வேறு ஆரியர்கள் வேறு", "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்பவர்களையும், தென்னாடுடைய சிவனே போற்றி என்பவர்களையும், "அய்யா நீங்கள் இனியும் இந்து மதத்தையும், வேதத்தையும், வேத சாரங்களான புராண இதிகாசங் களையும், வேதக்கடவுள்களையும், வேத ஆகமங்களையும் ஒப்புக் கொள்ளுகிறீர்களா?" என்று கேட்கின்றேன்.

பொதுவாகத் தமிழ் மக்களையும், சிறப்பாகத் தங்களைப் பார்ப்பனரல்லாதார் என்றும், ஆரியரல்லாதார் என்றும், சொல்லிக் கொள்கிறவர்களையும் இனியும் தங்களை இந்துக்கள் என்றும் இந்து மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்றும் சொல்லிக் கொண்டு ஆரிய வேஷம் போட்டுக் கொண்டு நடிக்கலாமா என்றும் கேட்கின்றேன்.

ஒருவன் தனக்கு இந்து மதத்தைக் கைவிடத் தைரிய மில்லையானால், தன்னை சூத்திரன் அல்ல என்றும், ஆரியன் அல்ல என்றும் எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்?

மதத்தினாலும், இனத்தினாலும், நாட்டினாலும் ஆரியரில் இருந்து பிரிந்து இருக்கிற தமிழர்கள் தங்கள் நாட்டில் 100க்கு 90 பேர்களாக அவ்வளவு கூடுதல் எண்ணிக்கை உள்ளவர்களாக இருந்து கொண்டு சகல துறைகளிலும் ஆரியர்கள் மேலாகவும், தமிழர்கள் தாழ்வாகவும், இழி மக்களாகவும் இருப்பது உலகத்தில் 8-வது அதிசயமல்லாவா என்று கேட்கிறேன். இதற்குத் தமிழ்ப் பெரியார்கள், பண்டிதர்கள், கலைவாணர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. முடிவாக நான் ஒன்று சொல்லுகிறேன். தமிழன் எவ்வளவு தூரம் இந்து மதத்தையும் இந்துமதக் கலை, ஆச்சாரம், கடவுள்,கோவில், பண்டிகை, சடங்கு, வேஷம், குறி, உடை, நடை முதலியவைகளை வெறுத்துத் தள்ளுகிறானோ அவ்வளவு தூரம் தான் அவன் மனிதத்தன்மையும் வரப்போகிறது என்றும் அவ்வளவு தூரம் தான் அவன் உண்மையான தமிழனாய் இருக்க முடியும் என்றும் வலிமையாய்க் கூறுகிறேன்.

*(30.10.1943 தேதியிட்டு வெளியான "குடி அரசு" இதழில் வெளியான கட்டுரை)*



# ஆரிய மதம் வண்டவாளம் -I
## வைச வைணவ ஆதாரங்கள் சொல்வது

– சித்திரபுத்திரன்

சைவம் என்பது வைணவம் என்பதும் வடமொழிச் சொற்க ளேயாகும். எப்படி எனில், சிவமதம், சைவமதம், விஷ்ணுமதம், வைணவமதம், வேதம் - வைதீகம், புராண-பௌராணிகம், புத்தம் - பௌத்தம், வேதகர்-வைதிகர் என்பன போன்ற வார்த்தைகள் யாவும் வடமொழி வார்த்தைகள் என்பதும் வடமொழி இலக்கணப்படி மருவியவை என்பதும் தெள்ளிதில் விளங்கும்.

இவை சம்பந்தப்பட்ட வடமொழிக் கடவுள்களும், வடமொழி மதங்களும், ஆரியர்கள் தங்கள் வேதங்களிலிருந்த வார்த்தைகளைக் கொண்டு பிற்காலத்தில் உண்டாக்கிக் கொண்டதோடு, அக்காலத்தி லேயே இரண்டாகப் பிரித்துக் கொண்டு, இரண்டு கட்சிக்காரர்களாகி, அக்காலத்திய அவர்களது நாகரிகப்படி ஒருவரை ஒருவர் வைது கொண்ட வண்ணம் இருந்திருக்கிறார்கள் என்பது இவை சம்பந்தப் பட்ட புராண இதிகாசக் கதைகளாலேயே விளங்கும். வேறு மதக் காரர்கள் தோன்றி இவர்களை மானம் போகும்படி வைய ஆரம்பித்த பின்னரே ஒருவருக்கொருவர் சற்று அடங்கி ஒற்றுமைப்பட்டு இருந்து வருகிறார்கள், என்றாலும் இவர்கள் அனாகரிகமாய், ஆபாசமாய் வைது அக்காலத்தில் ஏற்படுத்திக் கொண்டிருந்த ஆதாரங்கள், "இந்துக்கள்" மதமாக ஆகிவிட்டபடியால், அவை இன்னமும் இன்றும் புராணம், இதிகாசம் புண்ணியக்கதை என்பவற்றின் பேரால் இருந்து மக்களுக்கு "முக்தி" (மானக்கேட்டை) அளித்து வருகின்றன..
அவற்றில் ஒன்று, இரண்டு மாதிரி பார்க்கலாம். அதாவது,

### <u>சிவனும் பார்வதியும்</u>

சிவனையும் பார்வதியையும் வைணவர்கள் இழிவு செய்தி ருக்கும் தன்மையை இராமாயணம், பாகவதம், காஞ்சிப் புராணம் ஆகிய மூன்று முக்கிய ஆதாரங்களில் மாத்திரம் உள்ளவற்றைக் காண்போமாக.

இது வால்மீகி இராமாயணம்; 1877ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-அம் தேதி திருவல்லிக்கேணி, திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீனிவாச ராகவாச்சாரியார் தமிழ்மொழி பெயர்ப்புப் புத்தகம், பாலகாண்டம் 92-ஆம் பக்கம் 36-ஆவது சருக்கம்"பார்வதியும் சிவனும் புணர்ந்தது"

என்ற தலைப்பிலும், 37-ஆவது அத்தியாயம் "குமாரசாமியின் உற்பத்தி" என்ற தலைப்பிலும் இருப்பதோடு, சென்ற ஆண்டு காஞ்சிபுரம் பிரதி வாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் சுவாமிகளால் மொழி பெயர்க் கப்பட்ட "வால்மீகி இராமாயண வசனம்" என்பதில் பாலகாண்டம் 36,37-ஆவது அத்தியாயம் 75,76,77,78-ஆம் பக்கங்களில் உள்ளவற்றையும் அப்படியே காட்டப்படுவதாகும்.

<u>சிவன்பார்வதி புணர்ச்சி, பார்வதி தேவர்களுக்கு இட்ட சாபம்</u>

அ. சிவன் மனமயங்கி உவமையவளுடன் தேவ மானம் நூறு ஆண்டு கலவி செய்து கொண்டிருந்தார்.

ஆ. இதைக் கண்டு நான்முகன் முதலிய தேவர்கள் பயந்து சிவனை அணுகி, "பரமசிவனே இப்படி 100 ஆண்டு கலவி செய்தால் இதில் பிள்ளை பிறந்தால் உலகம் தாங்க முடியாது, நிறுத்தி விடும். வீரியத்தையும் விடாதீர்" என்று இறைஞ்சினார்கள்.

இ. சிவன் அந்தப்படியே மனமிரங்கி இசைந்து "தேவர்களே எனது கலவியை நிறுத்தி வீரியத்தையும், எனக்குள்ளாகவே அடக்கிக் கொள்ளுகிறேன். ஆனால் சிறிது பாகம் வெளி நோக்குகிறது அதை என்ன செய்வது?" என்று கேட்டார்.

ஈ. தேவர்கள் "அதைப்பூமியில் விடுங்கள்" என்றார்கள்

உ. சிவன் அப்படியே பூமியில் விட்டார்

ஊ. அது மலைகளும், காடுகளும் நிரம்பி வெள்ளப் பெருக்கம் போலாகி விட்டது.

எ. அதைக்கண்ட தேவர்கள், நடுங்கி அக்கினியை வணங்கி, "ஓ அக்கினி தேவனே! நீ இந்தச் சீவு வீரியத்திற்குள் புகுந்து அதை வற்றவைக்க வேண்டும்" என்று விண்ணப்பித்தார்கள்.

ஏ. அக்கினி வீரியத்திற்குள் நுழைந்தவுடன் அந்த வீரியம் திரண்டு வெள்ளி மலையாகிவிட்டது பிறகு நாணல்காடாயிற்று

ஐ. உடனே பார்வதி ஏமாற்றமடைந்தவளாகித் தேவர்களைக் கோபித்து "என்னைப் போலவே உங்கள் மனைவிமாரும் ஏமாற்றமடைந்து மலடிகளாகக் கடவது" என்று சாபட்டு விட்டாள்.



ஒ. பார்வதி, பூமாதேவியையும் பார்த்துக் கோபித்து "என்வயிற்றில் விழ வேண்டியதை நீ ஏற்றுக் கொண்டபடியால் மலடி ஆக ஆகி அநேகருக்கு மனைவியாகக் கடவது" என்று சபித்தாள்,

பிறகு தேவர்கள் கட்டளையால், அக்கினி, தான் கொண்ட வீரியத்தைக் கங்கையில் விட, கங்கை அதைத் தாங்கமாட்டாமல் மலையில் விட்டுவிட, அது தங்கமாகவும், வெள்ளியாகவும், தாமிரம், இரும்பு, எஃகு, தகரம், ஈயம் ஆகவும் ஆகி விட்டது, மீதி இருந்த சிறிது பாகத்தில் குமரன் (ஸ்கந்தன்-ஷண்முகன்) பிறந்தான் என்பதாக, இராமனுக்கு விஸ்வாமித்திரர் சொன்னதாக விஸ்வாமித்திரர் வாக்காகவே இருக்கிறது. இது எவ்வளவு அக்கிரமம் பாருங்கள்

<u>விஷ்ணுவைச் சைவன் இழிவுபடுத்துவது</u>

இதே விஷயத்தை ஆதாரமாய் வைத்து, விஷ்ணுவை இழிவுப்படுத்துவதற்காகக் காஞ்சிப்புராணத்தில் வட்டியும் முதலுமாய்த் திருப்பக் கொடுத்து இருப்பதைப் பாருங்கள்.

<u>காஞ்சிப்புராணம் –சுகசரீரப் படலம்</u>

<u>பாட்டு 27.</u>

"கந்தனை நல்க வேண்டிச் சீர் இமயத்து மடப்பிடியைத் திருமணஞ் செய்த பின்" இன்பக் கலவி நடத்துலுற்றான்.

<u>பாட்டு 28</u>

"இமயவல்லி வனமுலை தாக்க மகிழ்ந்து" பல நாள் கலவிப் பெருநலம் துய்க்கும் காலை, அண்டர் உணர்ந்து, வெருவி, அஞ்சி, அம்பிகை தன்பால் கருப்ப வீறுகொண்டிடு முன்னம் சிதைவு செய்யும் கொள்கையின் அங்கியை ஏவினார்கள்.

(அங்கி =அக்கினி)

அக்கினிப் பகவான் அதை மறுத்து, அந்த வேலை எனக்கு வேண்டாம் "நீவீர்கள் அவணெய்தி ஊறு நிகழ்த்திடுமின்களெனக் கரைந்தான்".

<u>பாட்டு 29</u>

உடனே, விஷ்ணு, பிரம்மா, தேவர்கள் மந்தர மலை சென்று நேரில் அந்த நிலையில் சிவனைக் கண்டு கும்பிட்டு நிறுத்து!நிறுத்து! என்று கதறினார்கள். சிவன் என்ன செய்தார்? கலவியில் இருந்து திமிரிக் கொண்டு அம்மணத்தோடு வந்துவிட்டார்.

<u>பாட்டு 30.</u>

"தெரிவையோடு ஆடும் புணர்ச்சி நாப்பன் சென்றனன் வெற்ற ரையோடும் அங்கண்" அப்படி அம்மணத்தோடு வந்த சிவன், விஷ்ணு முதலிய தேவர்களை உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்.

பாட்டு 35

"வேண்டுவ கூறுமின் உங்களுக்கு இன்னே வரமே நல்குதும்" என்று அருள. "ஈண்டிய மாயனை உள்ளிட்டோர் தம் ஏவலினால் முகன் ஏந்தி எந்தாய், மாண்ட மலைமகள் பால் கர்ப்பம் வாய்ப்பது வேண்டிலர் மால் முதலோர்" என்றனர்.

இதற்குச் சிவன் சொல்லுகிறார்:"ஓ தேவர்களே! அந்தக் கர்ப்பம் தரிக்கக் கூடாது என்பீர்களாகில், அந்தக் குளிர்ந்த, முத்தை உருக்கினால் போல் வெண்மையாக வெளியாகப் போகும் நீரைக் குடியுங்கள்" என்றார். உடனே அக்கினி பகவான் கையேந்தி வாங்கினான். அப்புறம் என்ன ஆயிற்று என்றால்.

பாட்டு 36

"பனித்த முத்துருக்கியன்ன வெண்புனல் பருகுமின்கள் எனப்புகன்று அருள வல்லே எரி இறை அங்கை ஏற்றான்".

பாட்டு 37

"அதனை .... உண்ண, விண்ணவர் எவர்க்கும் அந்நாள் மேவருங்கர்ப்பம் நீட்டி...... வெப்பு நோயினில் தொடங்குண்டார்கள்".

அப்புறம் என்ன நடந்தது என்றால், பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள் கர்ப்பமடைந்து விட்டார்கள். அந்த கர்ப்பத்தோடு சிவனை அணுகி வணங்க அவர் காஞ்சிபுரத்தில் உள்ள சுரகரி தீர்த்தத்தில் குளியுங்கள் உங்கள் கர்ப்பம் அழிந்துபோகும் என்றார். அந்தப்படி அவர்கள் அத்தீர்த்தத்தில் குளித்துத் தங்கள் கர்ப்பங்களை அழித்துக் கொண்டார்கள். ஆகவே வைணவன், சிவன் சில பல ஆயிரம் வருஷம் விடாமல் தொடர்ந்து பார்வதியுடன் கலவி செய்தான் என்று இராமாயணத்தில் புகுத்தினால், சைவன் அதை ஒப்புக்கொண்டு ஆமாம் அந்தக்காலத்தில் ஏற்பட்ட இந்திரியத்தை விஷ்ணு குடித்தார் என்று திருப்பி அடித்தான். என்ன நம்முடைய முதற்கடவுளாகிய திருமால், சிவபெருமான் ஆகியவர்க்ள யோக்கியதை என்பதைப்பாருங்கள்? இதை சு.ம.காரன் சொல்லவில்லை. இராமாயணமும், காஞ்சிப் புராணமும் சொல்லுகின்றன.

*(30.10.1943– குடி அரசில் வெளிவந்தது)*



# ஆரிய மத வண்டவாளம் - II

## சைவ வைணவ ஆதாரங்கள் சொல்லுவது

– *சித்திரபுத்திரன்*

இத்தலைப்பில் இதுவரை சைவ, வைணவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வளவு இழிவுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி இராமாயணத்தில் உள்ளபடியும், காஞ்சிப்புராணத்தில் உள்ளபடியும் ஆதாரங்களோடு எழுதப்பட்டிருந்ததை வாசகர்கள் படித்தறிந்திருக்கக்கூடும்.

இந்த வாரம் வைணவர்களுக்கு மிகவும் முக்கியமான சாஸ்திர ஆதாரமும், பதினெட்டுப்புராணங்களில் அதிமுக்கியமானதுமான பாகவதத்தில் இருந்து, சிவனை வைணவர்கள் ஆபாசமாய் இழிவுப் படுத்தியிருப்பதற்கு மற்றொரு சேதி எடுத்துக் காட்டப்படுகிறது.

அதாவது "ஸ்ரீமத் பாகவதம்" - "பண்டிதர், இஞ்சிக்கொல்லை, ஆர்.சிவராம சாஸ்திரியார் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது" 1912-ஆம் வருடம் சென்னை புரோகரசிவ் பிரசில் அச்சடிக்கப்பட்டதுமான "பாகவத தமிழ் வசனம்" என்னும் புத்தகத்தில் 8-வது ஸ்கந்தம் 12-ஆவது அத்தியாயம், 846,847,848, 849-ஆவது பக்கங்களில் "பரமசிவன் விஷ்ணுவின் மோகினி ரூபத்தைப் பார்க்க விரும்பியது" என்ற தலைப்பில் இருப்பதாகும். சற்று தயவு செய்து இதையும் படித்துப் பாருங்கள். என்னவென்றால், "ஸ்ரீமகாவிஷ்ணு மோகினி வேஷங் கொண்டு அசுரர்களை மோகிக்கும்படிச் செய்து ஏமாற்றித் தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தார்" என்கின்ற சங்கதியைப் பரமசிவன் கேள்விப்பட்டு, கைலாயத்தில் இருந்து பார்வதியுடன் விஷ்ணுவிடம் வந்து, விஷ்ணுவை வணங்கி, ஜகத் காரணரே, தேவதேவரே, நீரே பூரணர், நீரே நித்தியர், உம்மை விட வேறு கடவுளே இல்லாதவரே, (என்றும் இன்னும் பலவாறாகவும் சொல்லிப் பிரார்த்தித்ததாக இரண்டு பக்கம் எழுதப்பட்டிருக்கிறது) என்று பிரார்த்தித்துவிட்டு, தேவாதி தேவரே! தங்களுடைய எல்லா அவதாரத்தையும் தரிசித்தேன். மோகினி வேஷத்தை மாத்திரம் பார்க்கவில்லை அதனைப் பார்க்க வந்தேன், காட்டி அருள வேண்டும்" என்றார்.

அதனைக் கேட்ட மகாவிஷ்ணுவானவர். "அது அசுரர்களை ஏமாற்ற எடுத்த வேஷமானதால், அதைக் காண்பவர்களை மோகிக்கச் செய்யும். மன்மதனை அதிகப்படுத்தும், காமிகள் தான் அதைத் தோந்திரஞ் செய்வார்கள்" என்று சொல்லி மறைந்து, ஒரு நந்தவனத்தில்

பந்தாடிக் கொண்டிருக்கும் ஒரு அழகிய பெண்ணாகத் தோன்றினார்.

சிவனும் பார்வதியும் நான்கு புறமும் விஷ்ணுவைத் தேடிப்பார்த்துக் காணாமையால், நந்தவனத்தைப் பார்க்க அதில் ஒரு பெண் பந்து விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சிவன் புத்தி கலங்கிப் பார்வதியும் சிவகணங்களும் பக்கத்தில் இருப்பதைக் கூட நினைக்காமல் அவளை (மோகினியை) பார்த்தார். மோகினி வேஷம் போட்ட பெண், பந்தடிக்கும் கவனத்தில் தனது ஆடை (சேலை) யை மெல்ல நழுவவிட்டுவிட்டாள். அதைப் பார்த்த பரமசிவனுக்குக் காமம் அதிகரித்து விட்டது. மன்மதன் தனது முழு சக்தியையும் பிரயோகித்தான். பார்வதி பார்த்திருக்கப் பார்த்திருக்க வெட்கமில்லாமல் சிவன் மோகினியின் பின் சென்றான். மோகினி(விஷ்ணு) ஓடி ஒரு மரத்தில் மறைந்து கொண்டாள்.

சிவன் ஓடோடி அவளைப் பிடித்தான்

அவள் திமிரிக் கொண்டு வேகமாக ஓடினாள்

சிவன் வேகமாக ஓடி அவள் மயிரைப் பிடித்து இழுத்து, இரு கைகளால் ஆலிங்கனம் செய்த கொண்டு பலவந்தம் செய்தான்.

அவள் அவிழ்ந்த தலை மயிருடன், ஆடையின்றியே சிவனை வஞ்சித்து நழுவிக் கொண்டு ஓட்டமெடுத்தாள்.

சிவன் புத்தி இழந்து, காமங்கொண்ட “ஆண் யானையின் இந்திரியம் கீழே சிந்துவது போல்” தனது இந்திரியத்தை நிலத்தில் சிந்தவிட்டுக் கொண்டே பின் தொடர்ந்தார்.

சிவனுக்கு இந்திரியம் வெளிப்பட்டவுடன் மோகினி (விஷ்ணு) மறைந்து விட்டாள்.

சிவன் ஏமாந்தான்.

அந்த இந்திரியம் எங்கு எங்கு நிலத்தில் விழுந்ததோ அந்த இடமெல்லாம் தங்கம், வெள்ளி விளையும் சுரங்க பூமிகளாக ஆகிவிட்டன.

அந்த இந்திரியம் எங்கு எங்குக் காடுகளிலும், வனங்களிலும், மலைகளிலும், நதிகளிலும், குளங்களிலும், விழுந்ததோ அங்கெல்லாம் சிவனின் சான்னித்தியம் விளங்குகிறது. மகரிஷிகளும், தேவர்களும் அங்கு விளங்குகிறார்கள்.





சிவன் இம்மாதிரி தனது இந்திரியம் சிந்திய பின், புத்தி வந்து “நான் விஷ்ணுவினால் ஏமாற்றப்பட்டு மூடனாக்கப்பட்டேனே ” என்று கருதியதுடன் மகாவிஷ்ணுவின் மகிமை தெரிந்தவரானதால் இது சகஜம்தான் என்று திருப்திடைந்தார் என்பதாக, இந்தப்படி பாகவத மூலத்தின் 8-வது ஸ்கந்தம் 12-ஆம் அத்தியாயம் 1முதல் 37 ஆவது சுலோகம் வரை உள்ள விஷயத்தின் மொழிபெயர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறது.

இது இப்படியிருக்க, இந்தப் பாகவத விஷயங்களைத் தமிழில் கவியாகப் பாடப்பட்ட பாகவத புராணம் என்னும் நூலிலும், மோகினி உருவம் காட்டிய அத்தியாயம் பாட்டு, 1,2,3,4,5,6,7,8,9,10, 11,12,13,14,15,16,17,18,19,20,21 வரை இன்னும் மோசமாகப் பாடப்பட்டிருக்கிறது.

அதாவது, விஷ்ணுவின் மோகினி அவதாரத்தைப் பார்க்கச் சிவன் பார்வதியுடன் கைலையில் இருந்து வைகுண்டத்துக்குச் சென்று விஷ்ணுவை நமஸ்கரித்து “எமது சுவாமியே” என்று வணங்கி மோகினி வேஷத்தைக் காட்டு என்றான்.

விஷ்ணு பெண் உருவத்தை எடுத்தான்.

சிவனுக்குக் காமம் ஏற்பட்டுப் பொலிகாளை எருதுபோல் பெண்ணின் கிட்டப்போனான்.

விஷ்ணு ஓட்டம் காட்டினான். சிவன் புத்திகலங்கித் தன் இடுப்பிலுள்ள ஆடை (புலித்தோல்) அவிழ்ந்து கீழே விழுந்தும் கவனியாமல், ஓடி எட்டிப் பெண்ணின் மயிரைப்பிடிக்க முயன்றான். முடியவில்லை. மோகத்தால் சிவனின் இந்திரியம் கொட்டிப் போய்விட்டது.

பிறகு சிவனுக்குப் புத்திவந்து, சுவாமி! உன் பெருமையை அறியாமல் மோசம் போனேன் என்று விஷ்ணுவுக்கு நமஸ்காரம் செய்தான். உடனே விஷ்ணு சங்குசக்கரத்துடன் காட்சியளித்து மறைந்தார்.

“சிவன் கைலாயத்துக்குச் சென்று விஷ்ணுவின் பெருமையைப் பார்வதிக்குச் சொன்னான்” என்று இருக்கிறது. சிவனும் விஷ்ணுவும் இடுப்பில் துணியில்லாமல் ஆணும், பெண்ணுமாய்த் தெருவில் ஓடிய ஓட்டத்தைக் கண்டு வைகுண்டத்தில் உள்ள ஆண்களும், பெண்களுமான தேவர்கள், முனிவர்கள், நம் வைகுண்ட பிராப்தி

அடைந்தவர்கள் சிரிக்காவிட்டாலும், அந்தக் கதையைப் படித்து, நடித்துக் காலசேஷபம் செய்து ஸ்ரவணாநந்தம் செய்து வாழும் சைவ, வைணவ பக்தர் சிரிக்காவிட்டாலும், பகுத்தறிவும், சுயமரியாதையும் இல்லாத மானமற்ற கூலிப்பண்டிதர்கள் சிரிக்காவிட்டாலும், மற்ற உண்மைத் தமிழ் மக்கள் இப்படிப்பட்ட ஆரிய மதத்தையோ, இந்துமதத்தையோ, சைவ வைணவ மதங்களையோ பற்றி என்ன நினைப்பார்கள் என்று கேட்பதே இந்த வியாசத்தின் லட்சியமாகும்.

*(06.11.1943 தேதியிட்டு வெளியான"குடி அரசி"ல் வெளி வந்தது)*



# இந்துக்களின் இல்லற தருமம்

(ஆரிய முறை)

## பாரதம் – அனுசாசன பர்வம்

## இக்கதை லிங்கபுராணத்திலும் இருக்கிறது (அதிதி பூசை)

சுயோதனராஜனுக்கும் நர்மதைக்கும் பிறந்தவளான சுதானை என்றழகிய பெண்ணை அக்கின தேவருக்கு மணஞ்செய்து கொடுத்தனர். அக்கினிக்கும் சுதானைக்கும் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அவர்கள் அக்குழந்தைக்குச் சுதரிசனனென்று நாமங் கொடுத்தனர். பிறகு அக்குழந்தைக்குப் பூணூற் கலியாணஞ் செய்தும் தகுந்த வயதடைந் தவுடன் போகவதியென்னும் பெண்ணை மணஞ்செய்தும் வைத்தனர். இவர்கள் கிரகஸ்தாச்சிரமத்தைக் கடைப்பிடித்து வாழும் நாளையில், சண்டனை வென்றிட வேணுமென்கிற எண்ணங்கொண்டு குருசேத்திரம் சென்றனர். அங்கு அவர்கள் பர்ணசாலை ஒன்றைக்கட்டி மாதவர்கள், ரிஷிகள் முதலியவர்களுக்கு உபசாரம் முதலியவைகளும் செய்து இல்லற தருமத்தை நடத்திவருங்காலத்திற் சுதரிசனன் தன் மனதிற்குடி கொண்டிருக்கப்பட்ட விரத முடிவெல்லாம் தமது தரும பத்தினிக்குத் தெரியப்படுத்தி, பெண்ணே! இந்த ஆச்சிரமத்தின் வழிவருபவரை அன்பு பாராட்டி அறுசுவையன்னமும் வருந்தியுண்பித்து ஆசிர்வசனம் பெறவும், அதிதி பூசையே மேலானது. மற்றவை ஆசார வயிற்றுப் பூசை.

அதிதிகள் எதைக்கேட்டாலும் சந்தோஷத்துடன் கொடுக்க வேண்டியதே. அவர்கள் ஒருவேளை ஆனந்தமாய் உன்னை விரும்பினாலும் முகஞ்சுளிக்காமல், மேனி நெளியாமல் வீட்டிலொளியாமல், மேவி விடுவதே மேன்மைத் தருமத்துக்கு வேராகும். நானில்லாதபோது துறந்தோர் முதலிய பேர்கள் வந்தால், அவர்களைப் பூசித்தனுப்புவதே உனக்குக் கடமை; இதுவே தருமமென்று எடுத்துக்காட்டி இருவரும் மனங்கலந்து வாழ்ந்தார்கள்.

ஒரு நாள் சுதரிசனன் தருப்பை முதலியவைகள் கொண்டு வருவதற்குக் காட்டுக்குச் சென்றிருந்தனன். அந்தச்சமயம் ஓர் பிராமணன் பர்ணசாலைக்குள் வர, போகவதியென்பவள் கணவன் கற்பித்தபடி அவனுக்கு வேண்டிய பணிவிடை செய்து வணங்கினாள். வந்த பிராமணன் சந்தோஷப்பட்டு அவளைப் பார்த்து பைந்தொடியே! கந்தர்வன் கணையால் நொந்தயானுன்னை வந்தடைந்தேன்; உன்னமுத

முலையையும், அதரக்கனியையும், அலைந்து கெட்டோடி வந்த எனக்கருத்தி மோகத்தைச் சேருந் தாகத்தைத் தீருமென்று பலவாறு வேண்டினன். அந்தப்பெண், முனிவரே! தீமைக்கேதுவாகிய காரியங்களிற் பெரியோர்கள் விருப்பங்கொள்ளார்களே. இந்த இல்லறத்திலிருக்கப்பட்ட பதார்த்தங்களில் பெண்ணின்பந் தவிர்த்துப் பின்னையெது வேண்டினுங் கேளுமைய வென்றனள். பிராமணன் அவளைப் பார்த்து பெண்ணே! நீ என்ன தந்தாலுந் தீண்டேன். நான் மோக விகாரங் கொண்டிருக்கிறேன்; தடை செய்தால் என் பிராணன் போய்விடும்; உனக்குப் பாவமும், பழியும் வரும் என்றனன். அக்காரணங்களைக் கேட்ட அப்பெண், அதிதிகளின் மனது திருப்தியாகாவிடில் தாங்கள் செய்த பெருந்தவமெல்லாம் அழிந்து போகுமெனக் கருதிப் பிராமண அதிதியை நோக்கி. தேவரீரிச்சை தீரும்படிச் செய்யலாமென்று கட்டி முத்தாடி அதரபானமூட்டினாள். பிறகு பிராமணனும் போகவதியும் உல்லாசமாக ஓர் அறைக்குள் சென்றனர். காட்டிற்குச் சென்றிருந்த போகவதியின் கணவன் வந்து போகவதியைக் கூப்பிட்டும் காணாமல் வீட்டிற்குள் நுழைந்து பார்த்தான். அவ்வீட்டிற்குள் சுதரிசனன் மனைவியுடன் இருந்த அதிதிப் பிராமணன், அவனைப் பார்த்து ஓய்! பிராமணனே கவலைப்படாதே; கண் கலங்காதே; மயக்கமுறாதே; உன் மனைவி அதிதி பூசை பண்ணுகிறாளென்றனன். இக்கோதைக்கிசைந்த மணவாளன், சொற்குறிப்பறிந்து மேலான கதியைச் சம்பாதிக்க விரும்பி, அதிதியின் பேச்சைக் கேட்டு ஆனந்தமாய்ச் சரீரம் புளகித்து மனங்குளிர்ந்து, அய்யா! மஹானுபாவா! அதிதிகள் ஆசைப்பட்டு விரும்பினபடிக்கு வழிபடச் சொல்லி என் மனைவிக்கு உத்தரவு செய்திருந்தேன். அதன் பிரகாரம் என் பெண்ஜாதி அதிதி பூசை பண்ணுகிறாள். மெத்தவுஞ் சந்தோஷமென்று வாயிலிற் போய் நின்று வாயோயாமல் துதித்தான்.

அவன் மனைவியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருந்த வேதியன், வந்த வேடத்தையொழித்து எமதருமராஜனாகிய எதாரூபமெடுத்துச் சுதரிசனனை என்ன வரம் வேண்டுமென்று கேட்க, உடனே போகவதியும் அவளுடைய புருஷனுமாகிய புண்ணியவானும், அவனை எமதண்டனையும், எமவாதனையும் இல்லாமலிருக்கும்படி வரங்கேட்டனர். அந்தப்படி எமனின் வரத்தைப் பெற்று இன்பமாக வாழ்ந்து வந்தனர். எனவே இதைப்பார்த்துத் தான் பெரியபுராணமும், இயற்பகை நாயனார் சரித்திரம் முதலியவையும் பக்த லீலாமிர்தத்தில் கபீர்தாஸ் சரித்திரம் முதலியவையும் எழுதப்பட்டன என்பது இப்போதாவது புரிகிறதா?

*(**27.11.1943**-இல் வெளிவந்த குடியரசில் இடம் பெற்றது.)*



# திராவிடர் – தமிழர்

ஆரியர் பழக்க வழக்கமும் அவர்களது மதம், கடவுள் ஆகியவைகளும் அவை பற்றிய யோக்கியத் தன்மை, சக்தி, நடப்பு முதலியவைகளும் தமிழர்களாகிய நமக்குப் பெரிதும் பொருத்தமற்றவை என்பது நமது கருத்தாகும்.

இதை மறுத்து, அவற்றுள் எதையாவது நமக்குப் பொருத்தமுள்ளதென்றும் "அவை நம்முடையவையே ஒழிய ஆரியருடையதல்ல" என்றும் நம் சைவப் பண்டிதர்களைப் போல் தமிழர் யாராவது ஆதாரத்தோடு வழக்காடுவார்களேயானால், அப்படி இருந்தாலும் அவை அந்த (அதாவது மக்கள் இன்றைய அறிவுபெறாத அந்த) காலத்தில், அதுவும் ஒரு சமயம் அன்று இருந்த மக்களுக்குப் பொருத்தமாயிருந்தாலும் இருக்கலாமே ஒழிய இந்தக்காலத்திற்கு அவை கண்டிப்பாய் ஒதுக்கித் தள்ள வேண்டியவைகளேயாகும் என்பதும் நமது அபிப்ராயம்.

அதற்காக வேண்டியே, அதாவது அவைகளை நம்மக்கள் உணர வேண்டுமென்பதற்கு ஆகவே அவைகள் பற்றிய ஆதாரங்களை ஆரியர்களாலும் ஆரியர்களின் கொள்கைகளுக்கும் அவர்களது மதம், கடவுள்களுக்கும் அடிமைப்பட்ட நம் பண்டிதர்களாலும் கற்பிக்கப் பட்ட ஆதாரங்களிலிருந்தே சில எடுத்து அடிக்கடி "குடிஅரசில்" எழுதி வரப்படுகிறது.

அந்தப்படி இவை சம்பந்தமாக 'குடிஅரசி'ல் எழுதி வந்ததும் வருவதுமான சேதிகள் கண்டிப்பாக ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட வடமொழி ஆதாரங்களிலுருந்தும், அவைகளை ஆரியர்களாலேயே மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் மொழி பெயர்ப்புகளிலிருந்தும், மற்றும் அவற்றை நம் தமிழ்ப் பண்டிதர்களால் மொழி பெயர்த்தோ அல்லது ஆரியர் மொழி பெயர்த்ததைக் கவிகளாகப்பாடிய கவிகளிலிருந்தோ எடுத்துக் கையாளப்படுபவைகளேயல்லாமல் கற்பனையாக எந்தச் சங்கதியும் குறிப்பிடப்படுவதில்லை என்பதை மறுபடியும் வாசகர்களுக்கு உணர்த்துகிறோம்.

பொதுவாக ஆரிய நாகரித்தையோ அவர்களது பழக்க வழக்கங்களையோ பற்றி ஊன்றி ஆதாரங்களைக் கவனித்து சிந்தித்துப் பார்ப்போமானால் அவர்களுக்குள் ஒரு சமுதாயக் கட்டுப்பாட்டு முறையோ, ஒழுக்கமோ, நீதியோ, பகுத்தறிவு உணர்ச்சியோ ஏதும் இருந்ததாகக் காணப்படுவதற்கு இல்லை.

அக்கால மானாபிமானத்துக்கும் இக்கால மானாபிமானத்துக்கும் சிறிதும் சம்பந்தமில்லை என்பதாகவும் தெரிகிறது. ஆகவே ஆரியர்கள் சகல துறைகளிலும் அக்காலத்தில் ஆரியர் வாழ்வில் பூரண"சுயேச்சை" யோடு எவ்விதக் கொள்கையும் இல்லாமல் அவரவர்கள் இச்சைப்படி விலங்குகள் போல் வாழ்ந்து வந்ததாகவே தெரிகிறது. அதனால்தான் வள்ளுவர்,

"தேவரனையர் கயவர், அவருந்தாம் மேவனசெய்தொழுகலான்" என்று பாடினார் போலும் (தேவர் = ஆரியர்)

நாளாவட்டத்தில் அவர்கள் இந்தக்காலத் தேசவர்த்த மானத்திற்குத் தகுந்தபடி எது மேன்மையாகக் கருதப்படுகிறதோ அதைத் தங்கள் பழக்க வழக்கங்களாக மாற்றி அமைத்துக் கொண்டு வந்து இன்றைய நிலைமைக்கு அவர்கள் வந்திருக்கக்கூடும் என்றாலும் வேத புராண இதிகாச காலங்களில் அவர்கள் மிருகப் பிராயத்தில் இருந்திருக் கிறார்கள் என்பதே அவற்றிலிருந்து தெள்ளென விளங்குகின்றதாகும்.

நம் பண்டிதர்கள் பெரிதும் அவற்றைத் தங்கள் சமயத்திற்கும், தங்கள் கடவுள் நடப்புக்கும் பொருத்திக் கொண்டதால் அந்தக் கேவலமான சேதிகளை வெறுக்க யோக்கியமற்றவர்களாகி மூடிவைத்துத் தொல்லை கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். அதனாலேயே அவை நம்மாலும் வெறுக்கப் படாமல் உயர் சமயமாகப் போய்விட்ட தெனலாம்.

அந்தக்காலத்தில் கணவன் மனைவி என்கிற கூட்டு வாழ்க்கை ஒப்பந்தம் இன்று இருப்பதில் 100இல் ஒரு பங்கு கூட இருந்ததாகத் தெரியவில்லை.

அந்தக்காலத்து நாணயம், ஒழுக்கம், நம்பிக்கை, நல்லெண்ணம், பிறநலம் பேணுதல் முதலிய நற்குணங்களும் இக்காலத்தவைகளுக்கு மிகமிக மாறுபட்டதும் தாழ்ந்ததுமாகவே இருந்து வந்திருக்கிறது.

அந்தக்கால ஆரியர்களுக்கு ஏதாவது ஒரு சமயம் தெரியக் காணுவதில்லை. அவர்களுக்கு அப்போது ஏதாவது ஒரு கடவுளோ, பல கடவுள்களோ இருந்திருந்ததாகவும் தெரிய முடிய வில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் பஞ்ச பூதங்களையும், சூரிய சந்திரன் முதலியவைகளையும் மனிதனைப் போல் உருவகப் படுத்திக் கொண்டு தங்களுக்கு வேண்டியதை நல்கும்படி வேண்டிக் கொண்டு இருந்திருக்கிறார்கள். அப்படி வேண்டியிருப்பதிலும் ஒரு





கவனிக்கத்தக்க லாபமென்னவென்றால், தங்களுடைய ஒழுக்க ஈனங்களையும் மோசடிகளையும் அவைகளுக்கும் கற்பித்து இருக்கிறார்கள்.

ஆரியர்களின் முதல் ஆதாரம் வேதம் என்பதாகத்தான் தெரிகிறது. அந்த வேதம் பெரிதும் விபசாரம், மது மாம்சம் அருந்துதல், தாங்கள் அல்லாதவர்களை (ஆரியரல்லாதவர்களை) இழிவாய்ப் பேசுவதும், அவர்களை அடியோடு அழிக்கவும், தங்களுக்கு ஏவலாளாகக் கொள்ளவும், பழிவாங்கும் தன்மை போல் கொடுமை செய்வதும் ஆன காரியங்களையே கொள்கையாகவும், பிரார்த்தனையாகவும் கொண்டிருக்கின்றன.

வேதத்திலும் அதன்பின் ஏற்பட்ட வேதசாரமான புராணக்கதை காவிய இதிகாசங்களிலும் பார்த்தால் தகப்பன்-மகள், அண்ணன்-தங்கை என்கின்ற பேத முறைகூட இல்லாமலும், மிருகம்-மக்கள் என்கின்ற இன பேதம்கூட இல்லாமலும், ஆணும், ஆணுமாகவும் இன்னமும் எத்தனையோ விதமாகவும் இயற்கைக்கு விரோதமாகச் சேர்க்கையுடன் இருந்து வந்திருப்பதாகப் பல இடங்களில் காணப்படுகின்றன.

இவைகளையெல்லாம் ஏதோ காட்டுமிராண்டிக் காலத்துக் கொள்கை என்றும், எந்தச் சமூகத்திலும் மனிதன் மிருகப் பிராயத்தில் இருந்த காலத்தில் இப்படித்தான் இருந்திருக்க முடியும் என்றும், ஒருவிதத்தில் சமாதானம் செய்து கொள்ளலாம் என்றாலும், மேற்கண்ட விஷயங்களைக் கொண்ட ஆதாரங்களை இன்று ஆரியரும், தமிழரும் தங்கள் தங்கள் சமய ஆதாரங்கள் என்றும் தங்களால் போற்றிப் பாராட்டிப் பாதுகாக்க வேண்டிய புண்ணிய சரித்திரங்கள், புண்ணிய காரியங்கள் என்றும் பிரசங்கித்துப் பிரசாரம் செய்கின்றார்களோ, இதற்கு என்ன சமாதானம் என்பது நமக்கு விளங்கவில்லை.

சிவன், விஷ்ணு, பிரம்மா, சுப்பிரமணியன், இராமன், கிருஷ்ணன் முதலிய கடவுள்களைப் பற்றிப் பிறகு யோசிப்போம். அக்னி, வாயு, வருணன் முதலிய பஞ்சபூதக் கடவுள்களைப் பற்றியும் பிறகு யோசிப்போம். இந்திரன் என்கின்ற கடவுளைப்பற்றி ஆரியர்கள் தானாகட்டும் தமிழர்கள்தானா கட்டும் அந்தக் கடவுளின் கதைகளையும், பண்டிகைகளையும் எதற்காகக் கொண்டாட வேண்டும் என்று கேட்கிறோம்?

இந்திரவிழா சிலப்பதிகாரத்திலேயே கொண்டாடப் பட்டிருக்கிறது. இதிலிருந்து ஆரியர்கள் தவிரத் தமிழர்களும் ஆதிகாலத்தில் இருந்தே இந்திரவிழாவைக் கொண்டாடி இருக்கிறார்கள்

என்றும் ஆதிகாலத்திலிருந்தே தமிழர்கள் தன்மானமிழந்து ஆரியர்களுக்கு அடிமைப்பட்டு வந்திருக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது. பழந்தமிழ் அரசர்கள் என்று சொல்லி உரிமை கொண்டாடப் படுபவர்களான மூவேந்தர் (சேர,சோழ, பாண்டியர்) எவருமே உண்மைத் தமிழனாக இருந்ததாகச் சொல்லுவதற்கு ஆதாரமே காண முடிய வில்லை.

இன்றைய அரசியல் உலகத்தில் ஒரு முத்துரங்க முதலியாரும், பண்டிதர்கள் உலகத்தில் ஒரு கதிரேசன் செட்டியாரும், "கலைவாணர்" கள் உலகத்தில் ஒரு சிதம்பரநாத முதலியாரும் ஆகிய பெரியோர்கள் இன்று எப்படித் தமிழர்களாக இருந்து வருகிறார்களோ அப்படித்தான் பழங்காலத் தமிழர்களாக இருந்திருக்கிறார்களே ஒழிய இன்று தோழர்களின் உள்ளத்தில் உதித்தெழுந்த உணர்ச்சிப்படியான தமிழன் ஒருவன் கூட அக்காலத்தில் இருந்ததாகக் காண முடியவே இல்லை.

தமிழர்களுக்கு ஆரியர் வேதம், கடவுள், சமயாதாரம் ஆகியவைகள் தவிர்த்த தனித்தமிழ்க் கொள்கையோ, முறையோ, ஏதும் இருந்ததாகவேச் சொல்ல ஆராய்ச்சியாளர்களுக்கு இடமில்லாமலே நம் இன்றையத் தமிழ்ப் பண்டிதர்களும், பழங்காலப் பண்டிதர்களும் இன்றைய அரசர்களும் பழந்தமிழ் அரசர்களும் செய்துவிட்டார்கள்.

பெரிய புராணத்தையும், பக்தலீலாமிர்தத்தையும், கந்தப்புராணத்தையும், கம்பராமாயணத்தையும் கட்டிக்கொண்டு அழும் தமிழன் எவனாகட்டும் அவன் தனித் தமிழர் கொள்கை இதுவென எதையாவது காட்ட முடியுமா என்றும், இப்படிப்பட்ட தமிழன் யாராயிருந்தாலும் அவன் பண்டார சன்னதியாயிருந்தாலும் அவன் நாஸ்திகனல்லாமல் அதுவும் முழுமுழு நாஸ்திகனேயல்லாமல் கடுகளவு ஆஸ்திகனாகவாகிலும் இருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

அன்பே கடவுள், உண்மையே கடவுள், ஒழுக்கமே கடவுள், ஒப்பு நோக்கே (சமரசமே) கடவுள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு தமிழ் ஆஸ்திகன் மேற்கண்ட பெரியபுராணாதிகளையும் அதில் வரும் கடவுளர்களையும் அவர்களது சொற்களையும் பாராட்டி வழிபடுகிறவனாக இருந்தால் அவன் உச்சிக்குடுமி எப்படி வந்தது? தீக்கை எங்கிருந்து வந்தது? பஞ்சாக்ஷரம் ஏது? முத்திராதானம் (சமாசனம்) ஏது? அக்ஷடாஷரம் ஏது? பஞ்சகச்சம், திருநீறு, திருநாமம் பூச்சுகள் ஏது? என்பன போன்ற எத்தனையோ விஷயங்களைக் கவனித்தால் உண்மைத் தமிழன் எவனாவது இருக்கிறானா என்பதும் விளங்காமல் போகாது. தமிழன் என்று தன்னைச் சொல்லிக் கொள்ள



வேண்டுமென்றும் தமிழனுக்கென்று தனிக்கொள்கைகள் அடையாளங்கள் ஒன்றும் இருக்க வேண்டியதில்லை என்றும் கருதிக் கொண்டும் தமிழனில் பெரியவனாகத் தன்னைக் கருதவேண்டுமென்று இருப்பவர்கள் நம்மீது கோபித்துத்தான் தீருவார்கள். அதற்கு நாம் என்ன செய்யலாம். இவர் கோபத்தைவிட அதனால் ஏற்படும் கேட்டைவிடத் தமிழர்களின் மானம் பெரிது என்று எண்ணுவதால் இவர்கள் கோபத்தால் வந்தது வரட்டும் என்கின்ற துணிவு கொள்ள வேண்டியிருக்கிறது.

*(13.11.1943 - குடி அரசில் வெளிவந்த கட்டுரை)*

# இந்து – தமிழர் சூத்திரரா?

திராவிட நாட்டிலுள்ள திராவிட "இந்து"க்கள் ஆதிதிராவிடர்கள் உள்பட தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடியர்கள், மலையாளிகள் ஆகியவர்கள் சமுதாயத்தில் தங்களைக் கீழான ஜாதி என்றும் சூத்திரர்கள் என்றும் ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) அழைத்து இழிவுபடுத்துவதைப் பற்றி மிகமிக ரோஷப்படுகிறார்கள்.

"சூத்திரன் என்றால் ஆத்திரங்கொண்டு அடி","உன்னை எவனாவது சூத்திரன் என்றால் நீ அவனை மிலேச்சன் என்று கூப்பிடு என்றெல்லாம் உணர்ச்சி வார்த்தைகள் சொல்லுகிறார்கள்.

"வெள்ளைக்கார ராஜ்ஜியம் ஏற்பட்டு 200 வருஷமாகி இன்னமும் சூத்திரராய்த் தீண்டத்தகாதவராய், ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவராய் இருக்கிறோமே" என்று சர்க்கார் மீதும் பாய்கிறார்கள் இது சரியா? இதற்குக் காரணம் பார்ப்பனரும் சர்க்காருமா? அல்லது நாம் தானா? என்பதை நன்றாய்ச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது?

ஒரு மனிதர், அவர் "சர்" ஆனாலும் சரி, "ராஜா சர்" ஆனாலும் சரி, "மகாராஜா சர்" ஆனாலும் சரி, ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம் ஆனாலும் சரி, இன்னும் யாராயிருந்தாலும் சரி, இவர்கள் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டு, அந்தப்பட்டியில் பதிவாகி, இந்து மத சம்பிரதாயப்படி தங்கள் சமுதாய, குடும்ப, ஆச்சார, அனுஷ்டான பூசை காரியங்களைச் செய்து கொண்டும் வந்தால் அந்த இந்துமத முறைப்படி இவர்களைச் சூத்திரன் என்று அல்லாமல் வேறு என்னவென்று அழைப்பது? சமுதாய முறையில் இவர்களை எங்கு நிறுத்தி வைப்பது? என்பதை ஒவ்வொரு திராவிட இந்துவும் யோசித்துப் பதில் சொல்ல வேண்டும் என்று விரும்புகின்றோம்.

இந்த மதம் என்பதற்கு இஸ்லாம் மதத்தைவிட, கிறிஸ்தவ மதத்தைவிட வேறு மாறுதல் என்ன என்று பார்த்தால் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன், சண்டாளன் என்கின்ற பஞ்சவர்ண பேதம் அல்லாமல் வேறு என்ன முக்கிய வித்தியாசம் இருப்பதாய்ச் சொல்லக்கூடும்? கிறிஸ்தவமதத்தில் சூத்திரன் இல்லை. இஸ்லாம் மதத்திலும் சூத்திரன் இல்லை. சூத்திரன் இருக்கும் மதத்தை எடுத்து நம் மீது போட்டுக் கொண்ட பிறகு சூத்திரப் பட்டம் தாங்க நாம் பயந்தால் வெட்கப்பட்டால் முடியுமா? "கழுதைக்கு வாக்கப் பட்டு உதைக்குப் பயந்தால் முடியுமா?" என்கின்ற பழமொழிப்படி நம்மை





இந்து என்று சொல்லிப் பெருமை அடைந்து கொண்டு அதனால்வரும் பட்டத்தைப் பார்த்து ரோஷப்படுவது எப்படி அறிவுடைமையாகும் என்று கேட்கிறோம்.

திராவிட இந்துக்கள் இராமனையும் கிருஷ்ணனையும் கடவுளாகக் கொள்ளுகிறார்கள். பட்டை பட்டையாக நாமம் தீட்டிக் கொள்ளுகிறார்கள். இராகுகாலம், குளிகைகாலம் பார்க்கிறார்கள்; பார்ப்பானைக் கொண்டு ஹோமம், எக்கியம், நடத்துவதுடன் பார்ப்பான் இல்லாமல் கருமாதி, ருது சாந்தி, பிள்ளைப் பேறு, காது குத்தல், திதி, திவசம், திருமணம் முதலியவை நடத்துவதில்லை; ஸ்ரீராம நவமி, கோகுலாஷ்டமி, நரகசதுர்த்தி முதலிய இந்துமதப் பண்டிகைகள் செய்யாமல் இருப்பதில்லை.

இப்படியெல்லாம் நடந்து கொண்டு "பார்ப்பனன் நம்மைச் சூத்திரன் என்று கூப்பிடுகிறானே" என்று ஆத்திரப்பட்டால் இதைவிட கடைந்தெடுத்த முட்டாள் தனமான காரியம் என்ன இருக்க முடியும். பார்ப்பான் நம்மைக் கண்டு சிரிக்காமலும் பரிதாபப்படாமலும் எப்படி இருப்பான்?

எனவே "இந்து மதத்தை நான் உண்மையாய் விட்டுவிட்டேன். அடியோடு இந்து மதத்தில் இருந்து விலகிவிட்டேன் என்று சொல்ல முடியாத ஒருவர் உண்மையில் சூத்திரராய் இருக்க முடியாமல் வேறு என்னமாய்த் தான் இருக்க முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். பிராமணன் என்று சொல்லிக் கொள்ள முடியுமா? அப்படிச் சொல்லிக் கொண்டவர்களையாவது பார்ப்பான் சரியாய் நடத்துகிறானா?

கோவிலுக்குள் தன்னை விடமாட்டேன் என்கிறார்களே என்று ஒரு ஆதி திராவிடனோ, ஒரு திராவிட இந்துவோ கோபிப்பா னேயானால், அவன் இந்து மதக் கோவில்களுக்குள் இந்து மத ஆச்சாரச்சட்டம் தான் நடத்தப்பட வேண்டியது என்பது தெரியாதவனாய் இருந்தால் தானே கோபிக்க முடியும், இன்று கோவில் இலாக்கா தலைவர் திவான் பகதூர் நாராயணசாமி பிள்ளை; அடுத்தவர் ராவ்பகதூர் ராமச்சந்திரன் செட்டியார் இவர்களே அர்த்தமண்டபத்துக்கும் கர்ப்பகிரகத்திற்கும் வெளியில்தானே நின்று கொள்கிறார்கள். காரணமென்ன? இந்துக்கள் ஆன சூத்திரர்களுக்குள்ள இடந்தானே தங்களுக்குக் கிடைக்கும் என்பதை உணர்ந்துதானே.

இப்படியே "நான் ஒரு ஆதிதிராவிட இந்து. எனக்கு சர்க்கார் சட்டப்படி பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்" என்று ஒரு ஆதி திராவிடர் பாத்தியம் கொண்டாடுவாரேயானால் அவர் இந்துமத

சட்டப்படி எட்டி நின்றுதானே ஆக வேண்டும்? அப்படியில்லாமல் "இந்து மதத்தை விடமாட்டேன்; அதில் இருந்தால்தான் உத்தியோகம், பட்டம், பதவி, பணம் கிடைக்கும்; ஆனால் சட்டத்தின்படி எனக்குள்ள யோக்கிதையை மாத்திரம் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்" என்று சொன்னால் அது ஏய்க்கத்தான் பயன்படுமே தவிர யோக்கியதையைப் பெறப் பயன்படுமா என்று கேட்கிறோம்.

இப்படி ஒவ்வொருவரும் தன் சுயநலத்துக்காகச் சமுதாயத்தை ஏய்த்து வருவதால் தான் ஏதோ இரண்டொருவர் மாத்திரம் சமுதாயத்தின் பேரால் கொள்ளையடிக்க முடிந்ததே தவிரச் சமுதாயம் கீழான நிலையிலேயே சூத்திரனாகவும், பறையனாகவும் இருந்து வருகிறது. ஆகவே நம்மைப் பார்ப்பான் சூத்திரன் என்றும், தீண்டப்படாதவன், புலையன் என்றும் அழைப்பதிலும், பார்ப்பதிலும் ஏதாவது தப்பிதம் இருக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள் என்று வேண்டிக் கொள்ளுகிறோம். திருத்திக் கொள்ளுவதற்கு ஆகவே இதை எழுதுகிறோம்.

(13.11.1943-இல் வெளியான குடிஅரசு தலையங்கம்)



# நம் தாழ்மைக்குக் காரணம் என்ன?

"தமிழர் (திராவிடர்) நிலை தாழ்ந்திருக்கிறது", "சமுதாயத்தில் கீழான ஜாதி", "கல்வியில் 100க்கு 80 தற்குறி".

செல்வத்தில் 100க்கு 90 கூலி ஜீவனம்; தொழிலில் 100க்கு 75 சரீரப்பாடுப்பட்டு உழைக்கும் தொழில் ("ஈன"த் தொழில்) என்பது, சர்க்கார் உத்தியோகத்தில் காவலாளி (பியூன், ஜவான், கிளார்க் வேலை).

ஒற்றுமையில் 108 ஜாதியும் கட்டுப்பாட்டில் அவனவன் சுயநலமும், ஒருவனை ஒருவன் ஏய்ப்பதும், ஒழிக்கச் சமயம் பார்ப்பதும், சமயத்தில் (மதத்தில்) எதிரிகளுக்கு அடிமையாய் இருந்து உழைத்துப் போடுவது, அரசியலில் வஞ்சக அயோக்கியருக்கு வால்பிடித்துக் கைதூக்குவது, மானத்தில் ஈனமும், மதிப்பில் காரி உமிழத் தக்கதுமாகவும் இருக்கின்றது. "இதற்குக் காரணம் என்ன" என்பது ஒரு முக்கியமான கேள்வியாகும். அதோடு "தமிழ்நாடு பூராவிலும் தமிழனால் மதிக்கக் கூடிய போற்றக்கூடிய ஒரு தமிழன் கூடக் கிடையாது". அது போலவே ஒரு தமிழனால் குறைகூறப்படாத மற்றொரு தமிழனும் கிடையாது.

ஏதாவது ஒரு உத்தியோகத்துக்கோ, பதவிக்கோ, உயர் நிலைக்கோ வந்த உடன் தனக்கு மேலிருப்பவனையும், தனக்கு உதவி செய்தவனையும், கீழே தள்ள முயற்சிக்காதவனும், சிபார்சு செய்த வனைத் தூற்றித் திரியாதவனும் தமிழரில் பெரிதும் கிடையாது.

தன்னை முன்னுக்குக் கொண்டு வந்தவனுக்குக் குழி தோண்டாத தமிழன் அரிதிலுமரிது.

நன்றி விஸ்வாசம் காட்டுவதும், நயவஞ்சகம் செய்யாமையும் தமிழனுக்கு நஞ்சு என்று கூடச் சொல்லப்படுவதற்கும் அவை அநேகமாய் உண்மையாய் இருப்பதற்கும் காரணம் என்ன? என்பது இரண்டாவது கேள்வியாகும்.

"இந்த நிலையும் குணங்களும் பார்ப்பனர்களுக்குள்ளும், முஸ்லீம்களுக்குள்ளும், ஏன் சட்டைக்காரர்களுக்குள்ளும் கூடச் சாதாரணமாய்க் காண்பதற்கு முடிவதில்லை" என்று சொல்லப் படுகிறதே. இதற்குக் காரணம் என்ன? என்பது மூன்றாவது கேள்வி யாகும். இந்த மூன்று கேள்விகளிலும் உள்ள விஷயங்கள் சிறிது அதிகப்படுத்திக் கூறியிருப்பதாகச் சிலர் கருதலாம்.

அது உண்மையாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் பெரும்பாகம் உண்மை என்பதைப் பெரும்பான்மையோர் ஒப்புக் கொள்ளுவார்கள்.

ஆதலால் இவைகளுக்குக் காரணம் என்ன என்று கவனிக்க வேண்டாமா?

சென்னை மாகாண (திராவிட நாட்டு) ஜனசங்கையில் 100க்கு 3 பேர்களே பார்ப்பனர்கள்; 100க்கு எட்டு, அல்லது ஒன்பது பேர்களே முஸ்லீம்கள்; 1000க்கு ஒருவராய் இருந்தாலும் இருக்கலாம் சட்டைக்காரர்கள் (அதாவது திராவிட ஆரியர்); இப்படி மிகச் சிறுதொகையினராக இருக்கும் இவர்கள் தமிழர்களுக்கு ஏற்பட்ட மேற்கண்ட இழிவுகள் இல்லாமல் மேன்மையாய், கட்டுப்பாடாய், சுதந்திரமாய், மதிக்கத்தக்க வண்ணம், அன்னியன் கண்டு பயப்படும்டியும் வாழ்வதற்குக் காரணம் என்ன? என்று சிந்தித்தால் தமிழர் இழிவுக்குக் காரணங்கள் சுலபமாய்க் கிடைத்துவிடும்.

<u>காரணம்</u>

1. தமிழனுக்கு அஸ்திவாரமில்லை. அதாவது அவன் யார்? அவனுக்குச் சொந்தம் எது? அவனுடைய பூர்வோத்திரமென்ன? லட்சியம் என்ன? என்பனவாகிய நாலும் தெரியாதவனாகவும் ஆதாரம் இல்லாதவனாகவும் இருக்கிறான். ஆகவே அஸ்திவாரமில்லாத கட்டடம் வெடிப்புக் காணுவதும், அதிருவதும், அதில் (மானமோ மேன்மையோ) குடி இருக்கப் பயப்படுவதும் இயற்கை தானே? அது போலவே தனக்குச் சொந்தம், உரிமை இன்னது என்று தெரியாதவன் தொட்டதற்கெல்லாம் அன்னியனைப் பல்லைக் காட்டிக் கெஞ்சுவதும் ஒண்டுவதும் ஒருவனுக்கொருவன் போட்டிப்போட்டுப் பின் தள்ளி விட்டுப் போய்த்தன் காரியம் பார்த்துக் கொள்ளுவதும் இயற்கை தானே.

2. தமிழனுக்கு ஒரு ஸ்தாபனம் கிடையாது. வேறு எதனுடனாவது, சேர்ந்துதான் தன்னைத் தமிழன் என்று காட்டிக் கொள்ள வேண்டியவனாய் இருக்கிறான். அப்படி இல்லாவிட்டால் "பார்ப்பனரல்லாதான், முஸ்லீமல்லாதான், கிறிஸ்தவனல்லாதான், இந்து அல்லாதான்" என்பன போன்ற அல்லாதான் என்கின்ற பெயரால் தான் தன்னைக் காட்டிக் கொள்ள முடிகிறது.

3. தமிழன் என்றால் இதில் பார்ப்பான், முஸ்லீம், கிறிஸ்தவன் முதலிய பலர் சேருகிறார்கள், யாரையாவது நாம் சேர்ப்பதில்லை என்றால் அவர்கள், "நானும் தமிழன், தமிழ்நாட்டில் பிறந்தவன், தமிழ்





பேசுகிறவன்" என்கிறார்கள், அது மாத்திரமா? தமிழனே, தமிழ்ப்பண்டிதனே "தமிழ்நாட்டில் பிறந்து தமிழ் பேசுகிறவன் எவனும் அவன் நம்மை எவ்வளவு இழிவாயும், மானமற்ற தன்மை உண்டாகும்படியும் நடத்தினாலும் சரி அவனெல்லாம் தமிழனே" என்று வக்காலத்துப் பேசுகிறான்; ஆதாரம் காட்டுகிறான்.

4. தமிழன் நடந்து கொள்ளுவதற்கு என்று தனிமுறை, வழி, துறை கிடையாது. தமிழனுக்கு என்று தனி நடை, உடை, பாவனை கிடையாது.

5. தமிழனுக்கு என்று, தனித்த முறையில் ஆரியம் கலவாத இலக்கியமும் கிடையாது.

6. தமிழனைத் தனித்த முறையில் நடத்தத் தலைவன் கிடையாது.

7. தமிழருள் முக்கியமானவர்கள் என்று கருதும்படியாக நடந்துகொள்கிறவர்களுக்கும், பிறர் தங்களை அப்படிக் கருத வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களுக்கும், தமிழர் சமுதாயத்தையும் இனத்தையும் பொறுத்த பொறுப்பும் கவலையும் கிடையவே கிடையாது என்பதோடு அவர்களுக்குத் தங்களை அன்னியன் எவ்வளவு இழிவும் தாழ்மையும்படுத்தினாலும் அதைப் பற்றிய கவலையும் கிடையாது; அதைப்பற்றிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதும் இல்லை.

8. தமிழர்களுக்குத் தன்மானம், மானஉணர்ச்சி ஏற்படவழி இல்லை. ஏனெனில் தமிழன் எதைக்கொண்டு தனக்கு மான ஈனம் ஏற்பட்டதாக வருந்த முடியும்? இப்போது பெரும்பாலும் ஏதோ தனக்குச் சில கிளர்ச்சியின் பயனாய் புது யோக்கியதை அதுவும் தனது தகுதிக்கும் தேவைக்கும் மேல் இருப்பதாகக் கருதி இறுமாந்து இருக்கிறான். "எப்பொழுது தமிழனுக்கு மானம் இருந்தது இப்போது போய்விட்டதே என்று வருத்தப்படுவதற்கு" என்று எந்தத் தமிழன் யோசித்தாலும் அவனுக்கு என்ன ஆதாரம் கிடைக்கக்கூடும்.

அநேக அரசர்கள் அன்றும் இன்றும் கூடத் தாங்கள் மேல் ஜாதிக்குப் பிறந்ததாகப் பாத்தியம் கொண்டாடுகிறார்கள். அது போலவே அநேக விபசாரி மகனும், தான் மேல் ஜாதிக்குப் பிறந்ததாகப் பாத்தியம் கொண்டாடுகிறான். திராவிடத்தில் சில நாடுகளில் பொதுமக்களில் பலர் சமீபகாலம் வரை, இன்றும் தாங்கள் மேல் ஜாதிக்குப் பிறந்ததாகப் பெருமை பேசிக் கொள்கிறார்கள். 30,40 வருஷங்களுக்கு முன்பு சில பெருங்குடும்பங்களில் "நல்ல பிள்ளைகள்

பிறக்க மேல் ஜாதியார்களை வேலைக்கு வைத்துக் கொள்வது என்கின்ற சம்பிரதாயமிருந்ததாக" இன்றையக் கிழவன்மார்கள் பேசி கொள்வதுண்டு.

அண்ணன் தம்பி இரண்டு, மூன்று பேர் ஒரே பெண்ணைக் கட்டிக் கொண்டு "பாண்டவர்கள்" போல் வாழ்வதும், அக்காள் தங்கை 2,3 பேர் ஒரு கணவனைக் கட்டிக் கொண்டு ஆரியக் கடவுள்கள் போல் வாழ்வதும் முறையே கேரளத்திலும், தமிழ்நாட்டிலும் இன்றும் காணலாம். அண்ணன் இறந்து போனால் அவன் மனைவி உடனே தம்பிக்கு வாரிசு மனைவி ஆகிவிடுகிறாள். இதையும் இன்றும் சமுதாயப் பழக்க முறையில் பார்க்கலாம்.

விபசாரத்திற்குப் பயன்படுவதற்கு என்று ஒரு ஜாதியும், அதற்கென்று சமுதாயத்திலும் சட்டத்திலும் விதிமுறைகளும் தாய், தகப்பன், அண்ணன், தம்பி, அக்கா, தங்கைமார்கள் தங்கள் வீட்டுப் பெண்களை அத்தொழிலில் நடத்த முதலாளிகளாகவும், குமாஸ்தாவாகவும், ஏவலாளகளாகவும் இருப்பதும் இன்றும் திராவிடத்தில் பல இடங்களில் பார்க்கலாம்.

இவை தான் போகட்டுமென்றால் தமிழர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஒவ்வொருவரும் தங்களைப் பார்ப்பானுக்குக் கீழான ஜாதி என்றே கருதிக் கொண்டும் நடத்தப்படச் சம்மதித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் ஏன் காட்டுகிறோம் என்றால் தமிழர்களின் பிரமுகர்களுக்குத் தமிழர் சமுதாய இனத்தைப் பற்றி இழிவைப்பற்றிக் கவலை இருந்ததில்லை என்பதையும், இருக்கிறதில்லை என்பதையும் அவர்களில் பெரியவர்கள் என்பவர்களையும் பண்டிதர்கள் என்பவர்களையும் பார்த்தால் இனியும் இருக்கப் போவதில்லையென்பதையும் காட்டுவதற்கு ஆகவேயாகும்.

தமிழர்களில் உள்ள செல்வவான்களோ என்றால் தாங்கள் எப்படியெல்லாமோ தேடிய பொருளைத் தமிழர் சமுதாயத்துக்கு என்று ஒரு காசு கூடச் செலவிடுவதில்லை. அதற்கு மாறாகத் தங்கள் சமுதாய இழிவுக்கும் வீழ்ச்சிக்கும் காரணஸ்தர்களாகிய தங்களது எதிரிகளுக்குப் பயன்படும்படியே செலவழிக்கிறார்கள். தமிழர்களில் படித்தவர்கள் பண்டிதர்கள் என்பவர்கள் சங்கதியோ சொல்லவே வேண்டியதில்லை, ஒரு விபசாரி மகன், "நான் பார்ப்பானுக்குப் பிறந்தவன் தெரியுமா?" என்று தன்னைப்பற்றிப் பெருமைப் படுவதுபோல் தமிழ் படித்தவர்களும், பண்டிதர்களும், "இன்றுள்ள பார்ப்பனர்கள்





பிறவியினால் பார்ப்பனர்களாவார்கள்; நாங்களோ கருமத்தினால் பார்ப்பனர்கள் (அந்தணர்கள்) ஆவோம்" என்று இருவருக்கும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் நடக்கிறார்கள். மேல் ஜாதியார் நம்மை இழிவுபடுத்துவதைவிட இவர்கள் நம்மை அதிகமாய் நிரந்தரமாய் இழிவுப்படுத்துகிறார்கள்.

இனி, நம் உத்தியோகஸ்தர்களோ உத்தியோகம் கிடைக்கும் வரை "நான் தமிழன், தமிழன்" என்று பாத்தியம் கொண்டாடி உத்தியோகத்துக்கு அலைந்து திரிந்து அது கிடைத்தவுடன் பியூன்களின் "எஜமான்" சப்தமும் பங்காவின் குளிர்ந்த காற்றும் பொதுஜனங்களின் தலைகுனிவும் கிடைக்கிற நிலை வந்தவுடன், "தீஸ் டர்ட்டி இடியட் நான்பிராமின்ஸ் ஹாவ் நோ பிரெயின்; அண்ட் தே டோன் னோ எடிகேட்; தே ஆர் கொயட் அன்ஃபிட் ஃபார் எனிசிம்பத்தி" அதாவது, "இந்த அசிங்கம் பிடித்த மடப்பசங்களான பார்ப்பனரல்லாதார்களுக்குப் புத்தியும் கிடையாது. மரியாதையும் தெரிகிறதில்லை. இவர்கள் பரிதாபம் காட்டப்படக்கூட யோக்கியதை அற்றவர்கள்" என்பதாகச் சொல்லித் தன்னை வேறு ஜாதியானாக காட்டிக் கொண்டு தான் இன்னும் மேலே போவதற்கு ஆக உண்மையில் வேறு ஜாதியானாகவே ஆகிவிடுகிறார்.

பெரும்பதவிக்குச் சென்றுவிட்ட தமிழர்களோ, இன்னும் மேலே போவதற்கு ஆக, மற்றவர்கள் எல்லோரையும் கீழ்ஜாதியாக மதித்துத் தங்களைத் தவிர வேறு யாரும் இப்பதவிக்கு வரக்கூடாதென்று மற்றவர்களைக் கீழ் ஜாதியாக மதித்துத் தங்களைப் பார்ப்பனர் என்றே மதித்துக் கொண்டு, தங்களைத் தவிர வேறு யாரும் இப்பதவிக்கு வரக்கூடாது என்று மற்றவர்களைக் கீழே அழுத்தவே முயற்சிக்கிறார்கள். வக்கீல்கள் போட்டி போட்டுக் கொண்டு எதிரிகளுக்கு நல்ல பிள்ளைகளாகிறார்கள். தமிழர் மிராசுதார்களோ, மேல் ஜாதியைக் காப்பியடித்து பார்ப்பனத்தமிழ் பேசிக்கொண்டு, தங்கள் வேலைக்காரர்களையும், ஏழைகளையும் சூத்திரர்கள் போலவே கருதி, நடத்தி மேல் ஜாதி தயவுக்கே காத்திருக்கிறார்கள்.

இனி யார் பாக்கி என்றால் யந்திர சாதனங்களில் முதலாளிகள். இவர்களுக்குக் கடவுள், பணம் தான். என்ன பண்ணியாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதும், "ஜாதியாவது இனமாவது, நம் வேலையை நாம் பார்ப்போம்; செல்வாக்கிருக்கிறவன் காலண்டைக் கிடப்போம். நமக்கென்னத்துக்கு ஊர்வம்பு? அவ்வப்போது பணம் செலவு செய்து எதையும் சாதித்துக் கொள்ளலாம்" என்பதை "மோக்ஷ மந்திரமாக"க் கொண்டவர்கள்,

நம் தொண்டர்களில் சிலரின் சங்கதியோ, பிரபுக்கள், பணக்காரர்கள், பண்டிதர்கள் ஆகியவர்கள் நிலையே இப்படி இருக்கும் போது நாளையக் கஞ்சிக்கு வகையில்லாமல் வீம்பு பேசிக்கொண்டு நடக்கிற சில தொண்டர்களிடம் என்ன எதிர்பார்க்க முடியும்? பல யோக்கியதைத் தொண்டர்கள் இருக்கலாம், ஆனால் "பசி வந்திடப் (பெண்டு பிள்ளைகள் கஞ்சிக்கு அழுதிட) பத்தும் பறந்து போகும்" அல்லவா.

இவர்கள் இத்தனை பேருக்கும் தங்கள் நலத்தில், பெருமையில், முற்போக்கில், பணத்தில் தங்கள் வாழ்வில் இருக்கும் கவலையில் 100-இல் 1 பாகம் கூடத் தங்கள் இழிவைப் பற்றியோ தங்கள் இன (தமிழர்) இழிவைப் பற்றியோ கவலை இல்லை,

ஆகவே தமிழர் இழிநிலைக்கு இவைகளைவிட வேறு காரணம் என்ன வேண்டும்?

ஆனால் பார்ப்பனரைப் பாருங்கள், காந்தியை "மகான்", "மகாத்மா", "கடவுள்" என்கிறார்கள்!

காந்தியாரோ காங்கிரஸ் மெம்பர்கூட அல்ல; காங்கிரசுக்கு இன்று தலைவர் கூட இல்லை; எதிரி ஆட்களில் ஒருவரைப் பிடித்துத்தான் தலைவர் என்று செய்து தங்கள் இஷ்டப்படி ஆட்டுகிறார்கள். தங்கள் இனத்தைப்பற்றிக் காங்கிரஸில் ஒரு வார்த்தையும் கிடையாது. ஆனால் காங்கிரசைத் தங்கள் இன நன்மைக்கே நடத்துகிறார்கள். அதில் சேர்க்கப்படும் நம்ம ஆட்களுக்கு எந்த விதமான சுதந்திரமும் கிடையாது, ஆனால் அவர்கள் சேர்த்த நம்ம ஆட்களைக் குரங்குகள் போல் ஆட்டுகிறார்கள். எவனாவது தன் இனத்தைப் பற்றியோ இனநலத்தைப் பற்றியோ நினைப்பானேயானால் உடனே அவனை மகாத்மா, மகாராஜா வானாலும் தலைகீழாகக் கவிழ்த்தித் துராத்மா ஆக்கி விடுகிறார்கள்.

தங்களுக்கென்று ஸ்தாபனமில்லாமலும் அமைப்பு இல்லாமலும் (காங்கிரசையே தங்கள் ஸ்தாபனமாக வைத்து) அவர்கள் காரியம் நடந்து கொண்டே போகிறது. அவர்களில் இனப்பற்று, ஜாதிப்பற்று இல்லாதவர்கள் கிடையவே கிடையாது, இவற்றைக் காட்டிக் கொள்ளவோ வேலை செய்யவோ பயப்படுகிறவர்கள் அவர்களில் ஒருவர் கூடக் கிடையாது.

ஒரு காசு செலவு செய்யாமலும் ஒரு ஸ்தாபனத்திலும் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமலும் வெறும் அறிக்கை விடுவதைத் தவிர வேறு



ஒரு வேலையும் செய்யாமல் சாஸ்திரிகளும், அய்யர்களும், ஆச்சாரியர்களும் ஆக எத்தனை பேர்கள் இன்று அரசியலையும் இந்திய நாட்டுச் சமுதாய இயலையும் தங்கள் இன நலத்துக்குத் தங்கள் இஷ்டப்படி நடத்துகிறார்கள்?

இதற்கெல்லாம் காரணம் அவர்களுக்கு உள்ள இன அபிமானமும், ஜாதி அபிமானமும், இனத்தில் ஜாதியில் தங்களைத் தனியாய்ப் பிரித்துக் காட்டிக் கொள்ளுவதும், அதை அவர்களில் ஆணும் பெண்ணும் அத்தனை பேரும் கொண்டிருப்பதுமல்லாமல் வேறு என்ன என்று சொல்ல முடியும்? இப்படியேதான் முஸ்லீம்களும் இருக்கிறார்கள். ஆகவே நமது கீழ்மைக்கும் நம் எதிரிகளினுடையவும் மற்றவர்களுடையவும் மேன்மைக்கும் வேறு காரணம் என்ன சொல்லுகிறீர்கள்?

*(27.11.1943 - குடிஅரசில் வெளிவந்த கட்டுரை)*